LAW & SOCIETY TRUST

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்று தீர்மானங்களின் இற்றைப்படுத்தல்.

## - மார்ச் 2026 -

5th April 2026

LAW TRACKER

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்றுத் தீர்மானங்கள் இற்றைப்படுத்தல் – மார்ச் 2026

*5 ஏப்ரல் 2026*

## பொருளடக்கம்


**I. சட்டங்கள்........................................................................2**

1. 2026 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்........2
2. 2026 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின், மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் ........................................................................2
3. 2026 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, நீதித்துறைத் (திருத்தச்) சட்டம்........................................2

**II. முன்மொழியப்பட்ட சட்டமூலங்கள்........................................................................2**

1. 2026 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடை (திருத்த) சட்டமூலம்...........................2
2. 2026 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்த) சட்டமூலம் ........................................................................2
3. 2026 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டமூலம்....................................2
4. 2026 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு (திருத்த) சட்டமூலம்....3
5. 2026 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபை (திருத்த) சட்டமூலம் ........................................................................3
6. 2026 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம்........................................................................3

**III. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்........................................................3**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி........................................................3
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி........................................................4
வலுசக்தி மற்றும் மின்சக்தி........................................................6
டிஜிட்டல் பொருளாதாரம்........................................................6
விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசனம்........................................................6
சுகாதாரம்........................................................8
போக்குவரத்து, பெருந்தெருக்கள், மற்றும் நகர அபிவிருத்தி........................................................8
பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள்........................................................9
பொதுமக்கள் பாதுகாப்பு, குடிவரவு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள்........................................................9
நீதி, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு........................................................10
பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்........................................................10
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள்........................................................11
சுற்றாடல்........................................................11
மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள்........................................................12
வீடமைப்பு, நிர்மாணம், மற்றும் நீர் வழங்கல்........................................................12
துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து........................................................12
சுற்றுலாத்துறை........................................................12
பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு........................................................12
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்........................................................12
பாதுகாப்பு........................................................12
கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சியாண்மை........................................................13
விளையாட்டு........................................................13

## I. சட்டங்கள்

### 1. 2026 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்

இந்தச் சட்டம் 2026 மார்ச் 20 ஆம் திகதி சட்டவாக்கம் செய்யப்பட்டது. நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்குநர்களுக்கான உரிமமளித்தல், மேற்பார்வை செய்தல், விசாரணை செய்தல், மற்றும் தடை செய்தல் என்பவற்றிற்கான தத்துவங்களுடன் நியதிச்சட்ட நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை ஒன்றினை இச்சட்டம் தாபிக்கின்றது. 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்தை நீக்குவதுடன் முன்னர் ஒழுங்குறுத்தப்படாத தரப்புகளுக்கு ஒழுங்குறுத்தல் உள்ளடக்கத்தை விரிவுபடுத்துகின்றது. இதனால் அத்துறை முழுவதையும் ஓர் ஒற்றை மேற்பார்வைச் சட்டகத்தினுள் கொண்டுவருகின்றது.

### 2. 2026 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின், மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

இந்தத் திருத்தம் 2026 மார்ச் 6 ஆம் திகதி சட்டவாக்கம் செய்யப்பட்டது. அபாயகரமான அவுடதங்களை உடைமையில் வைத்திருத்தல், கடத்தல், உற்பத்தி செய்தல், மற்றும் விநியோகித்தல் போன்ற தவறுகளுக்கான தண்டங்களை (தண்டப்பணங்கள் மற்றும் சிறைத்தண்டனை நியதிகள்) இந்தச் சட்டம் பரந்தளவில் அதிகரிக்கின்றது. கட்டுப்படுத்தப்பட்ட பதார்த்தங்களின் அட்டவணைகளை விரிவுபடுத்தி இற்றைப்படுத்துகின்றது. அவுடதங்கள் தொடர்பான தவறுகள் சம்பந்தமான தேடுகை, கைப்பற்றல், தடுத்து வைத்தல், மற்றும் விசாரணை என்பவற்றிற்காக சட்ட அமுலாக்க அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட தத்துவங்களை வழங்குகின்றது.

### 3. 2026 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, நீதித்துறைத் (திருத்தச்) சட்டம்

இந்தத் திருத்தம் 2026 மார்ச் 6 ஆம் திகதி சட்டவாக்கம் செய்யப்பட்டது. நீதித்துறையின் வேலைப்பளு, வழக்கு முகாமைத்துவம், மற்றும் நீதிமன்றச் செயன்முறைகளை நவீனமயப்படுத்தல் என்பவற்றை இயலச்செய்து, நீதிமன்றங்களுக்கிடையேயான நியாயாதிக்கம் மற்றும் வழக்குகளின் ஒதுக்கீடு தொடர்பான ஏற்பாடுகளையும் திருத்துகின்றது.

## II. முன்மொழியப்பட்ட சட்டமூலங்கள்

### 1. 2026 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம்

இந்தச் சட்டமூலம் 2026, மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. 'சட்டமுறையற்ற செயல்' என்பதன் வரைவிலக்கணம் மற்றும் பணம் தூய்தாக்கலின் நோக்கெல்லை என்பவற்றை விரிவாக்கம் செய்வதனை இது முன்மொழிகின்றது. நிதி நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட தொழில்கள் மீது விரிவுபடுத்தப்பட்ட தகுந்த கவனம், பதிவுகளைப் பேணுதல், மற்றும் அறிக்கையிடற் கடப்பாடுகள் என்பவற்றை விதிப்பதற்கு இது நாடுகின்றது. விசாரணைத் தத்துவங்களை அதிகரிப்பதுடன், எல்லை கடந்த ஒத்துழைப்பிற்கும் வசதி செய்கின்றது.

### 2. 2026 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம்

இந்தச் சட்டமூலம் 2026, மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. கசினோக்கள், நிலையான சொத்து முகவர்கள், அரும் உலோகங்கள்/கற்களின் வியாபாரிகள், மற்றும் ஏனைய நிதிசாரா தொழில்கள் என்பவற்றை உள்ளடக்குவதற்காக "அறிக்கையிடல் நிறுவனங்களின்' பட்டியலை விரிவாக்கம் செய்கின்றது. சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் (STRs) நிதிசார் உளவறிதற் கூறிற்குக் கட்டாயமாக அறிக்கையிடப்படுதலை அறிமுகம் செய்கின்றது. நிதிசார் உளவுகளை பெறுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றை உள்நாட்டு ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் வெளிநாட்டு எதிரிணைகள் ஆகியோருடன் பகிர்ந்து கொள்ளுதல் என்பவற்றிற்கான நிதிசார் உளவறிதற் கூறின் தத்துவங்களை அதிகரிக்கின்றது.

### 3. 2026 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டமூலம்

இந்தச் சட்டமூலம் 2026 மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. தனியாட்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்குப் பிரயோகிப்படத்தக்க வருமான வரி வீதங்கள், வரி வகுப்புகள், மற்றும் விலக்களிப்புகள் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திருத்துகின்றது. கடுமையான சுய மதிப்பீடு, கணக்காய்வு, அத்துடன் பிந்திய கோப்பிடல் மற்றும் வருமானத்தைக் குறைவாக அறிக்கையிடல் உள்ளடங்கலாக இணங்கியொழுகாமைக்கான தண்டங்களின் ஏற்பாடுகள் ஆகியவற்றை அறிமுகம் செய்கின்றது. தொழில் வழங்குநர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான நிறுத்தி வைத்தல் வரிகள் மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகள் மீதான விதிகளை விரிவுபடுத்துகின்றது. வரிப் பொறுப்புக்களில் பொருள்கோடலின் தெளிவின்மையைக் குறைக்கும் வகையில், வியாபார வருமானம், மூலதன ஆதாயங்கள், மற்றும் அனுமதிக்கப்படத்தக்க கழிப்பனவுகள் என்பவற்றைக் கையாளுகின்றது.

### 4. 2026 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு (திருத்தச்) சட்டமூலம்

இந்தச் சட்டமூலம் 2026 மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. பதிவு செய்யப்பட்ட வியாபாரங்களினால் செலுத்தப்படத்தக்கதான உதவுதொகைகளின் கணிப்பீட்டை நேரடியாகப் பாதிக்கும் விதிப்பனவு வீதம் மற்றும் மொத்த விற்பனை வரவு வரம்பு ஆகியவற்றைத் திருத்துகின்றது.

### 5. 2026 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டமூலம்

இந்தத் திருத்தச் சட்டமூலம் 2026 மார்ச் 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் கருத்திட்டங்களை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மற்றும் முகாமை செய்தல் என்பவற்றிற்காக சபையின் நியதிச்சட்டத் தத்துவங்களை இது விரிவுபடுத்துகின்றது. உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக நிதிகளைத் திரட்டுதல், கடன் பெறுதல், மற்றும் அரச – தனியார் பங்காண்மைகளில் (PPPs) ஈடுபடுதல் என்பவற்றை மேற்கொள்வதற்குச் சபையை இயலச்செய்யும் ஏற்பாடுகளை அறிமுகம் செய்கின்றது. நீர் இணைப்புகள், வழங்கற் தராதரங்கள், மற்றும் சேவைக் கட்டணங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையுடன் தொடர்புபடுகின்றது.

### 6. 2026 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம்

இந்தத் திருத்தச் சட்டமூலம் 2026 மார்ச் 11 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. பயங்கரவாத நோக்கங்களுக்காக மறைமுக நிதியளித்தல், சேகரிப்பு, அல்லது சொத்துக்களை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குவதற்காகப் பயங்கரவாதி நிதியளிப்பின் வரைவிலக்கணத்தை விரிவுபடுத்துகின்றது. நிதி நிறுவனங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவை உள்ளடங்கலாக, பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய நிதிகள் மற்றும் சொத்துக்களை முடக்குதல் மற்றும் கையகப்படுத்தல் தொடர்பான ஏற்பாடுகளை அறிமுகம் செய்கின்றது. பயங்கரவாத நிதியளிப்புடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களை கண்டுபிடித்தல், தடுத்தல், மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றிற்கான நிதி நிறுவனங்களின் கடப்பாடுகள். வெளிநாட்டு நியாயாதிக்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் பரஸ்பர சட்ட உதவி மற்றும் தகவல்களைப் பகிரும் பொறிமுறை என்பவற்றில் ஈடுபடுகின்றது.

## III. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்

### கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி

- **மாணவர் அனுமதி மீதான புதிய சுற்றறிக்கை வெளியீடு (தரங்கள் 2 – 11)** (30 மார்ச் 2026)

  சுற்றறிக்கை இல 27/2025 இன் கீழ் அவதானிக்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் பற்றிய நடைமுறைச் சவால்களை நிவர்த்தி செய்வதற்காக தரம் 2 முதல் தரம் 11 வரையான (தரம் 5 மற்றும் 6 தவிர) மாணவர் அனுமதிக்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கை ஒன்றினை வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. நெரிசலைத் தடுப்பதற்காக வகுப்பறையின் அதிகபட்ச கொள்ளளவு வரையறைகளைத் தக்க வைத்துள்ளது; அனைத்து அரச பாடசாலைகளுக்கும் தகைமை அளவுகோல்கள், ஆவணப்படுத்தற் தேவைப்பாடுகள் மற்றும் மாணவர் அனுமதி வரிசைத்தொடர்கள்.

- **இரண்டாம் நிலைக் கல்விக்காகத் தகவல் தொழில்நுட்ப நிலையங்களை தாபிப்பதற்கான கருத்திட்டத்தை மீள ஆரம்பித்தல்** (23 மார்ச் 2026)

  பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பக் கல்வியைக் கூட்டிணைப்பதற்காக ஒரு தேசிய இலத்திரனியல் கற்றல் நிலையம் (National E-Learning Centre) அத்துடன் (தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்) இரண்டு மாகாணத் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. அரசாங்கத்தின் இணை நிதியிடலுடன் கொரிய எக்ஸிம் வங்கியிலிருந்து மூலக்கடன் பெறப்பட்டது; பொதுவான கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளில் கட்டமைக்கப்பட்ட இலத்திரனியல் கற்றலுக்கு ஆதரவு வழங்குகின்றது; நிபுணர் குழுவின் மீளாய்வு மற்றும் விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தல் வழிநடத்தப்படும்.

- **கல்விச் சீர்திருத்தங்களுக்கான தேசிய வழிப்படுத்தற் குழுவின் நியமனம்** (23 மார்ச் 2026)

  தரம் 1 முதல் 6 வரையான வகுப்புகளுக்கான கல்விச் சீர்திருத்தங்களை மேற்பார்வை செய்வதற்காக வழிப்படுத்தற் குழு ஒன்றினைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. அமைச்சர்கள், நிபுணர்கள்,

அதிகாரிகள், தொழில்வாண்மையாளர்கள், மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை குழு உள்ளடக்குகின்றது; தற்போதுள்ள அரசாங்கக் கொள்கைகளுடன் நேரொத்ததாக அமைவதை உறுதிப்படுத்துகின்றது; தரம் 1 (2026) மற்றும் தரம் 6 (2027) ஆகியவற்றிற்கான நடைமுறைப்படுத்தல் மீது கவனம் செலுத்துகின்றது; கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளின் உகந்த சீராக்கங்கள் என்பவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

- **அரசாங்கப் பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்கான கருத்திட்டம்** (23 மார்ச் 2026)

  2026–2029 காலப்பகுதியில் 400 பாடசாலைகளில் 400 மீற்றர் ஓடுதளங்களைக் கொண்ட கூடிய தரநிலையான விளையாட்டு மைதானங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. ஒவ்வொரு கல்வி வலயத்திலும் தலா ஒரு தேசிய பாடசாலை மற்றும் மூன்று மாகாணப் பாடசாலைகள் என்னும் வகையில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றது; உட்கட்டமைப்பு வசதியின்மை காரணமாக நிகழும் குறைந்தளவிலான விளையாட்டுப் பங்கேற்பை நிவர்த்தி செய்கின்றது; மதிப்பிடப்பட்டுள்ள செலவு: ரூ. 2,010.50 மில்லியன்; உடல், சமூக மற்றும் உளவியல் நலனை மேம்படுத்தல் மற்றும் திறமை மிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் காணல் ஆகியவை முன்வைக்கப்பட்டுள்ள குறிக்கோள்களாகும்.

- **பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகளை (Sanitary Napkins) வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்** (23 மார்ச் 2026)

  ஒவ்வொரு மாணவிக்கும் ஒவ்வொன்றும் தலா ரூ. 720 மதிப்புள்ள இரண்டு பரிசு வவுச்சர்கள் என்னும் வகையில், 1.05 மில்லியன் பாடசாலை மாணவிகளுக்கு வருடாந்தம் சுகாதார அணையாடைகள் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. அரசாங்க மற்றும் அரசாங்க நிதியுதவி பெறும் பாடசாலைகளில் தரம் 6 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவிகளை உள்ளடக்குகின்றது; ஒவ்வொரு மாணவியும் விருப்பத் தெரிவின் பிரகாரம் 12 பொதிகளை (8 அணையாடைகள்) அல்லது 8 பொதிகளை (10 அணையாடைகள்) கொள்வனவு செய்ய முடியும்; தொடர்ச்சியான கல்வி மற்றும் மாதவிடாய் சுகாதார முகாமைத்துவம் என்பவற்றை உறுதி செய்கின்றது.

- **வட்டியற்ற மாணவர் கடன் திட்டத்திற்கான தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைதல்** (9 மார்ச் 2026)

  அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பயிலும் 7,000 மாணவர்களுக்கு 10 ஆம் கட்ட அரசாங்க மாணவர் கடன் திட்டத்தின் கீழ் வட்டி இல்லாக் கடன்களை வழங்குவதற்கான மேலதிக வங்கி ஒன்றாகத் தேசிய சேமிப்பு வங்கிக்கு அங்கீகாரம் வழங்கியது. தற்போதைய கடன் வழங்குநர்கள் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி; அரச பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறாத மாணவர்களுக்கு ஆதரவளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

- **டித்வா சூறாவளியினால் பேரழிவுக்குள்ளான பொதுக்கல்வி நிறுவனங்களைப் புனரமைத்தல்** (3 மார்ச் 2026)

  ரூ. 2,274.23 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டுடன் 150 தேசியப் பாடசாலைகள் மற்றும் 7 தேசியக் கல்வியியல் கல்லூரிகளின் புனரமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கியது. சரிவான நிலப்பரப்புகளின் மீது அமைந்துள்ள நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய நிலச்சரிவு அபாயத்தைத் தணித்தலும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு ரூ. 1,988.83 மில்லியனும் கல்லூரிகளுக்கு ரூ. 285.40 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது; 2025 டிசம்பரில் அங்கீகரிக்கப்பட்ட குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தைப் பயன்படுத்துகின்றது; தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் கட்டமைப்புசார் மற்றும் பூகோள தொழில்நுட்ப விதப்புரைகளைப் பின்பற்றுகின்றது; சூறாவளிக்குப் பின்னர் கல்விசார் உட்கட்டமைப்பின் துரித மீட்டெடுப்பினை உறுதி செய்கின்றது.

- **மாகாண, வலய, மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் கல்வி உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களின் அபிவிருத்தி** (16 மார்ச் 2026)

  நிர்வாக வினைத்திறன் மற்றும் சேவையின் தரம் என்பவற்றை மேம்படுத்துவதற்காக மாகாண, வலய, மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பௌதீக உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதற்கும் நவீன உபகரணங்களை வழங்குவதற்குமான ஒரு கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. கருத்திட்டத்திற்கான செலவு: 2026 – 2028 காலப்பகுதிக்கு ரூ. 1,264 மில்லியன்; மாகாண சபைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

- **இலங்கை காலநிலை மற்றும் இயற்கை மீள்நிலை முதலீட்டு நிதியத்தைத் தாபித்தல்** (30 மார்ச் 2026)

  மத்திய மலைப்பகுதிகள் போன்ற அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சூழற்தொகுதி முறைமைகள் மீதான கவனத்துடன், காலநிலைக்கான தழுவல், சூழற்தொகுதி மீட்டெடுப்பு, மற்றும் இயற்கை மீள்நிலை முதலீடுகள் ஆகியவற்றிற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதற்காக ஒரு நியதிச்சட்ட அதிகாரசபை மற்றும் இயற்கை மீள்நிலை முதலீட்டு நிதியம் என்பவற்றை உருவாக்குவதற்காக சட்டவாக்கத்தின் வரைவைத் தயாரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. சட்டத்துடன் இணங்கியொழுகுதல் மற்றும் அரசிறைப் பொறுப்பு என்பவற்றை உறுதிப்படுத்தி, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றாக இந்நிதியம் தாபிக்கப்படவுள்ளது; ஒருங்கிணைக்கப்பட்ட பங்கீடுபாட்டாளர் முகாமைத்துவத்திற்கான பொறிமுறை ஒன்றினை ஏற்பாடு செய்கின்றது; இலங்கையின் காலநிலை நிதி மூலோபாயம் 2025 – 2030 உடன் நேரொத்ததாக அமைகின்றது.

- **2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கத் தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்திற்கான திருத்தம்** (30 மார்ச் 2026)

  அறவீட்டின் ஏற்பாடுகளை விரிவுபடுத்தல், அறவிடப்படா வருமானத்தை உள்ளடக்குதல், மற்றும் வரிப் பொருத்தப்பாட்டினை இற்றைப்படுத்தல் என்பவற்றிற்காக 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கத் தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தினைத் திருத்துவதற்கான வரைவுச் சட்டமூலம் ஒன்றினை வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2015 ஆம் ஆண்டிலிருந்து வலுவிலுள்ள சீராக்கங்களைக் கூட்டிணைக்கின்றது; அறவிடப்படா வருமானத்தை (அறவிடப்பட முடியாத கடன்கள்) உள்ளடக்குவதற்காக நோக்கெல்லையை விரிவுபடுத்துகின்றது; தற்போதைய மற்றும் எதிர்காலத் தொலைத்தொடர்பு வழங்குநர்களின் இணக்கத்தை உறுதிப்படுத்துகின்றது; 2026 இன் வரவுசெலவுத்திட்டத்தின் அரசிறைக் குறிக்கோள்களுடன் நேரொத்ததாக அமைகின்றது.

- **வலுசக்தி நெருக்கடியின்போது அரச செலவின முகாமைத்துவம்** (30 மார்ச் 2026)

  மத்திய கிழக்கு நெருக்கடியின்போது அத்தியவசியமற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தும் அதேவேளை, 2026 மார்ச் 1 ஆம் திகதியில் உள்ளவாறாக நிலவும் எரிபொருள் விலைகளின் கீழ் அரச அலுவலர்கள், அமைச்சர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளுடன் தொடர்புடைய படிகளின் தொடர்ச்சியான கொடுப்பனவிற்கும் அங்கீகாரம் வழங்கியது. அத்தியாவசிய அரசாங்க சேவைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது; அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைகளினுள் அரசிறை ஒழுங்கினைப் பேணுகின்றது; பூகோள வலுசக்தி அதிர்வுநிலைகளின் காரணமாக தற்காலிக சீராக்க நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கின்றது.

- **அரசாங்க மானிய நடவடிக்கைகளின் ஊடாக எரிபொருள் விலைகளை ஸ்திரப்படுத்தல்** (30 மார்ச் 2026)

  2026 மார்ச் 22 ஆம் திகதி வலுவுக்கு வரும் வகையில், 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் ஓட்டோ டீசல் என்பவற்றின் விலைகளின் ஏற்பட்ட அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் எரிபொருள் இறக்குமதியாளர்களுக்கு அரசாங்க மானியங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. பெற்றோலுக்கு லீற்றருக்கு ரூ. 20 மற்றும் டீசலுக்கு லீற்றருக்கு ரூ. 100 வரையான மானியங்கள்; உள்நாட்டு எரிபொருள் விலைகளின் மீது மத்திய கிழக்கின் பதற்றநிலை ஏற்படுத்தும் தாக்கங்களைத் தணிப்பதை இலக்காகக் கொண்டுள்ளத.

- **வலுசக்திப் பொருளாதாரத்தின் அபிவிருத்தி மீதான நிபுணர் குழுவின் நியமனம்** (23 மார்ச் 2026)

  நிலைபேறான தேசிய பொருளாதார வளர்ச்சி மற்றும் பிரதான துறைகளிடையே சிறந்த ஒருங்கிணைப்பு என்பவற்றை அடைவதை இலக்காகக்கொண்டு வலுசக்திப் பொருளாதாரத்திற்கான சட்டகம் ஒன்றினை விருத்தி செய்வதற்காக, கலாநிதி ஹான்ஸ் விஜேசூரியவின் தலைமையிலான நிபுணர் குழு ஒன்றின் நியமனத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

- **ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கொள்கை அடிப்படையிலான கடன் பெறுகை 2026** (16 மார்ச் 2026)

  பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்காக ஐந்து உப நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 620 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கொள்கை அடிப்படையிலான கடன் பெறுகைக்கு அங்கீகாரம் வழங்கியது: வர்த்தகம், முதலீடு மற்றும் கைத்தொழில்கள் (USD 100 மில்.); MSME நிதி உள்ளடங்கற்தன்மை (USD 220 மில்.); நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் (USD 100 மில்.); மீண்டெழுதல் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு (USD 100 மில்.); மற்றும் விவசாயப் பெறுமதிச் சங்கிலிகள் (USD 100 மில்.).

- **2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர ஒழுங்குவிதியின் திருத்தம்** (16 மார்ச் 2026)

  2,000 அமெரிக்க டொலர்கள் என்னும் வரையறையைத் திருத்தம் செய்யாது, 4 தினங்களுக்குள் இரு தடவைகள் உள்நுழையும்போது வெளிநாட்டு விருந்தினர்கள் தீர்வையற்ற கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கும் திருத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

- **இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான செஸ் வரியைக் கட்டம் கட்டமாக நீக்குதல்** (3 மார்ச் 2026)

  2,634 இணைந்த வகைப்படுத்தற் குறியீடுகளின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான செஸ் வரியை நான்கு வருடகாலத்தில் (2026 – 2029) கட்டம் கட்டமாக நீக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளுக்கு மிகவும் அவசியமான இடைநிலைப் பொருட்களுக்கான உயர்ந்த உள்ளீட்டுச் செலவுகளைக் குறைக்கின்றது; ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது; உற்பத்தித் துறைகளில் முதலீடு, கைத்தொழில் விரிவாக்கம், மற்றும் தொழில்வாய்ப்பு என்பவற்றை ஊக்குவிக்கின்றது.

- **பொருளாதாரக் கண்காணிப்புப் பற்றிய குழு ஒன்றினைத் தாபித்தல்** (9 மார்ச் 2026)

  மத்திய கிழக்குப் பூகோள அரசியல் ஸ்திரமின்மைக்கு மத்தியில் பொருளாதார அபாயங்களைக் கண்காணிப்பதற்கும் கொள்கை விதப்புரைகளை வழங்குவதற்கும் தொழில் அமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் மற்றும் துறைசார் நிபுணர்கள் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இறக்குமதியில்

தங்கியிருத்தல், அனுப்புகைகளின் பாய்ச்சல்கள், வர்த்தகம், மற்றும் முதலீட்டுத் தாக்கங்கள் என்பவற்றைக் கண்காணிக்கின்றது.

- **அனர்த்தத்தினால் பேரழிவுக்குள்ளான ஏற்றுமதிப் பயிர்களின் மீள்நடுகைக்கான நிவாரணம்** (9 மார்ச் 2026)

  2025 நவம்பரில் நிலவிய அதீத காலநிலையினால் பாதிக்கப்பட்ட தேயிலை, இறப்பர், மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு, மீள்நடுகை நோக்கங்களுக்காக, நிதி நிவாரணங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. தேயிலை: ஹெக்டேயர் ஒன்றிற்கு ரூ. 500,000 வரை; இறப்பர்: ஹெக்டேயர் ஒன்றிற்கு ரூ. 400,000 வரை; தெங்கு: ஹெக்டேயர் ஒன்றிற்கு ரூ. 700,000 வரை.

## வலுசக்தி மற்றும் மின்சக்தி

- **மகா ஓயா பம்பிகள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்ட நீர் சேமிப்பு மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டம்** (30 மார்ச் 2026)

  கேள்வி குறைவாக உள்ள காலப்பகுதிகளின்போது மிகையாகவுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தியை சேமித்து, கேள்வி அதிகமாக உள்ள காலப்பகுதிகளில் வழங்குவதற்கு கட்டமைப்புரீதியில் பம்பிகள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்ட நீர் சேமிப்பு மின் உற்பத்திக் கருத்திட்டம் ஒன்றிற்கு (ரூ. 243.09 பில்லியன்) அங்கீகாரம் வழங்கியது. வலுசக்திப் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பு என்பவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றது. இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் (அபிவிருத்தி மற்றும் நிர்மாணம்); கட்டமைப்பினை சமநிலைப்படுத்தல் அத்துடன் சூரிய மின்சக்தி மற்றும் காற்றாலை மின்சக்தி உள்ளடங்கலான புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாடு என்பவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றது.

- **தனித்து இயங்கும் மின்கல வலுசக்திக் களஞ்சிய முறைமைகளை நிர்மாணித்தல் (ஒவ்வொன்றும் 10 MW/40 MWh)** (30 மார்ச் 2026)

  புதுப்பிக்கத்தக்க சக்தியை சேமிப்பதற்கும் அமைத்தல், உரிமையாக்குதல், இயக்குதல் (BOO) என்னும் மாதிரி ஒன்றின் கீழ் 15 வருடகாலத்திற்கு முறைமையின் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்கும் 25 மின்கல வலுசக்தி களஞ்சிய முறைமைகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. சூரியசக்தி மற்றும் காற்றாலை வலுசக்தி என்பவற்றைத் தேசியத் தொகுப்பினுள் ஒன்றிணைப்பதற்கு ஆதரவளிக்கின்றது.

- **50MW மின்கல வலுசக்தி களஞ்சிய முறைமைகளின் நிர்மாணம்** ((30 மார்ச் 2026)

  ஆரம்ப இரவுநேர உச்ச மின் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் போட்டிகர விலைமனுக்கோரலின் ஊடாக தற்போதுள்ள சூரிய மின்னுற்பத்தி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள எஞ்சிய 50 மெகாவாட் மின்கல சேமிப்பு முறைமைக் கொள்ளளவின் பெறுகைக்கு அங்கீகாரம் வழங்கியது. வெளிப்படைத்தன்மை மிக்க விலைமனுக்கோரல் மற்றும் படிம எரிபொருள் மின்னுற்பத்தி நிலையங்களில் தங்கியிருத்தல் என்பவற்றை நிவர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

## டிஜிட்டல் பொருளாதாரம்

- **தேசிய டிஜிட்டல் தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்புத் தளத்தை நடைமுறைப்படுத்தல்** (30 மார்ச் 2026)

  தொழிற்பாடுகளை நவீனமயப்படுத்தல் மற்றும் முகவராண்மைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்தல் என்பவற்றிற்காக செயற்கை நுண்ணறிவுக் கருவிகளைக் கூட்டிணைத்து, அனைத்துப் பொதுச்சேவை ஊழியர்களுக்கும் ஒரு பாதுகாப்பான டிஜிட்டல் தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்புத் தளத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு: ரூ. 620 மில்லியன் ; டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2025 – 2030 இற்கு மேலதிகமாக செயற்படுத்தப்படும்.

- **தேசிய QR கொடுப்பனவுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தைத் துரிதப்படுத்தல்** (23 மார்ச் 2026)

  அனுப்புனர் அல்லது பெறுநருக்கு எவ்வித கட்டணமுமின்றி ரூ. 5,000 இற்குக் குறைவான கொடுக்கல் வாங்கல்களுக்காக LankaQR டிஜிட்டல் கொடுப்பனவுகளின் ஊக்குவிப்பிற்கு அங்கீகாரம் வழங்கியது. சராசரி மாதாந்த கொடுக்கல் வாங்கல்கள் அண்ணளவாக 90,000 (அண்ணளவாக ரூ. 390 மில்லியன்) என்பதுடன் காசற்ற கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஆதரவளிக்கின்றது.

- **ஜப்பானின் உதவியுடன் Apprentice வானொலி அவசரகால தகவல் தொடர்பாடல் வலையமைப்பினைத் தாபித்தல்** (23 மார்ச் 2026)

  பாரம்பரிய தொடர்பாடல் வலையமைப்புகள் தோல்வியுறும் நிலை ஏற்படும் அனர்த்த நிலைமைகளுக்காக வானொலி அவசரநிலை வலையமைப்பு ஒன்றினைத் தாபிப்பதற்காக ஜப்பான் அரசாங்கத்துடன் (USD 181,837) மானிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது.

## விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசனம்

- **களனி கங்கை ஆற்றுப்படுக்கைக்கான நீர் முகாமைத்துவத் திட்டத்திற்கான ஆலோசனை ஒப்பந்தத்தை வழங்குதல்** (30 மார்ச் 2026)

  மாசடைதலைத் தடுப்பதற்கும் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் களனி கங்கை ஆற்றுப்படுக்கைக்கான விரிவான நீர் முகாமைத்துவத் திட்டம் ஒன்றினை உருவாக்குவதற்கான ஆலோசனை ஒப்பந்தம் ஒன்றிற்கு (ரூ.

206.65 மில்லியன்) அங்கீகாரம் வழங்கியது. 7 ஆர்வ வெளிப்படுத்தல்கள் மற்றும் 4 சுருக்கப் பட்டியலிடப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக்கொண்ட மதிப்பீடு; வெள்ள மற்றும் மாசுத் தணிப்பு அத்துடன் சுற்றாடலின் மீட்டெடுப்பு என்பவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றது; நீண்டகால நீர்க் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான அடிப்படையைத் தாபிக்கின்றது; அமைச்சரவையின் பெறுகைக் குழுவின் விதப்புரையைத் தொடர்ந்து Resource Development Consultants (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

- **உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கான இழப்பீடு** (30 மார்ச் 2026)

  கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பான வரையறைகளின் காரணமாக பயிரிடும் நிலங்களை இழந்த 276 குடும்பங்களுக்கான இழப்பீடாக குடும்பம் ஒன்றிற்கு ரூ. 12 இலட்சம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. காணி ஆக்கிரமிப்பு, வனப் போர்வை, காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல் மற்றும் தொலைதூரம் சம்பந்தமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்கின்றது; மாற்றுப் பயிரிடல் காணிகளுக்குப் பதிலாக நிதி இழப்பீட்டை வழங்குகின்றது; இடம்பெயர்ந்த விவசாயிகளின் ஒப்புரவான நடத்துகையை உறுதி செய்கின்றது.

- **களு கங்கை ஆற்றுப்படுக்கையில் மூன்று உலர் அணைகளை அமைப்பதற்கான சாத்தியத் தகவாய்வு** (30 மார்ச் 2026)

  உயர் அபாயமுள்ள களு கங்கை ஆற்றுப்படுக்கையில் வெள்ளப்பெருக்கு அபாயங்களைக் குறைப்பதற்காக மூன்று உலர் அணைகளை (மல்வல, தல II, மற்றும் தல III) நிர்மாணிப்பதற்காக சாத்தியத் தகவாய்வு ஒன்றை மேற்கொள்வதற்கான ஆலோசனை ஒப்பந்தம் ஒன்றினை Central Engineering Consultancy Bureau இற்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. நீரியல், சுற்றாடல், மற்றும் சமூகத் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்படும்.

- **சம்பா/கீரி சம்பா பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பதிலீட்டு அரிசி இறக்குமதி** (30 மார்ச் 2026)

  உள்நாட்டு சந்தையில் பற்றாக்குறைகளைத் தடுப்பதற்காக 1,040 மெற்றிக் தொன் GR 11, பொன்னி சம்பா, மற்றும் கிரி/பால் பொன்னி அரிசி வகைகளைப் பதிலீடுகளாக இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2026 மே 31 ஆம் திகதியளவிலான சுங்க விடுவிப்புடன், 2026 ஏப்ரல் 1 முதல் 2026 ஏப்ரல் 30 வரையான காலப்பகுதியை உள்ளடக்குகின்றது; இந்த வகைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களிலிருந்து இறக்குமதியாளர்களுக்கு விலக்களிக்கின்றது.

- **விவசாய மற்றும் கைத்தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள இளம் தொழில்முயற்சியாளர்களுக்கான கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்** (23 மார்ச் 2026)

  ஐந்து வருட காலப்பகுதியில் 50,000 இளம் தொழில்முயற்சியாளர்களை விருத்தி செய்வதற்காக 4% வருடாந்த வட்டியில் வழங்கப்படும் சலுகைக் கடன் திட்டம் ஒன்றின் தொடர்ச்சிக்கு (2026 ஆம் ஆண்டிற்காக ரூ. 750 மில்லியன்) அங்கீகாரம் வழங்கியது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி, மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் ஊடாக கடன்கள் விநியோகிக்கப்படும்; 2025 இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் பூர்வாங்க ஒதுக்கீடு ரூ. 500 மில்லியன்; விவசாய மற்றும் கைத்தொழிற்துறை தொழில்முயற்சியாண்மையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

- **விலங்கு உணவிற்காக சோளத்தை இறக்குமதி செய்வதற்காக முறைசார் நடைமுறையின் உருவாக்கம்** (3 மார்ச் 2026)

  அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் ஊடாக சோளத்தின் விலைகளை நிர்ணயிப்பதற்கும் உள்நாட்டு வழங்கல் போதாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் சோள இறக்குமதியை அனுமதிப்பதற்குமான ஒரு பொறிமுறைக்கு அங்கீகாரம் வழங்கியது. கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால் குழு நியமிக்கப்படும்; உள்நாட்டு வழங்கலில் காணப்படும் பற்றாக்குறைகளுக்கு மாத்திரம் என இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்படும்; உள்ளூர் சோள விவசாயிகளின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

- **இலங்கை திரிபோஷ லிமிடட் நிறுவனத்திற்கு உணவுத் தரத்திலான சோளத்தை இறக்குமதி செய்வதற்கான மற்றும் விநியோகிப்பதற்கான நடைமுறை** (3 மார்ச் 2026)

  இணக்கத்தைப் பேணும் அதேவேளை ஒழுங்குமுறைத் தாமதங்களைத் தவிர்த்து, திரிபோஷ உற்பத்தியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக 2026 இல் 15,000 மெற்றிக் தொன் வரையிலான உயர்தர சோளத்தைக் கட்டம் கட்டமாக இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. இறக்குமதி உரிமங்கள், தாவர உரிமங்கள், மற்றும் பெறுகைச் செயன்முறைகளை ஒழுங்குபடுத்துகின்றது; தேசிய போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம் தொடர்வதை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது (திரிபோஷ).

- **காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களுக்கும் மனிதர்களுக்கும் ஏற்படும் சேதத்தைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்** (3 மார்ச் 2026)

  பயிர்கள் மற்றும் மனிதக் குடியேற்றங்களுக்கு காட்டு விலங்குகளினால் (யானைகள், காட்டுப் பன்றிகள், குரங்குகள், மந்திகள், மர அணில்கள், மற்றும் மயில்கள்) ஏற்படுத்தப்படும் சேதங்களைத் தணிப்பதற்காக

விரிவான மூலோபாயம் ஒன்றினை விருத்தி செய்வதற்குக் கமத்தொழில் அமைச்சரின் தலைமையிலான அமைச்சுசார் குழு ஒன்றை நியமித்தது.

- **2026 யால பருவத்திற்காக உர மானியக் கொடுப்பனவு** (3 மார்ச் 2026)

  தொடர்ச்சியான விவசாய உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானப் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக நெல்லுக்கு: ஹெக்டேயருக்கு ரூ. 25, 000 (விவசாயி ஒருவருக்கு ஆகக்கூடியது 2 ஹெக்டேயருக்கு) மற்றும் பயிர்களுக்கு ஹெக்டேயருக்கு ரூ. 15, 000 (விவசாயி ஒருவருக்கு ஆகக்கூடியது 2 ஹெக்டேயருக்கு) என்னும் வகையில் உர மானியத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. மஹா 2025/2026 நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சி; வினைத்திறன் மிக்க உள்ளீட்டுப் பயன்பாடு மற்றும் பயிர் விளைச்சல் என்பவற்றிற்கு ஆதரவளிக்கின்றது.

## சுகாதாரம்

- **மகியங்கனை ஆதார வைத்தியசாலையை சுகாதார அமைச்சின் கீழ் மத்திய அரசின் உடமையாக்கிக் கொள்ளுதல்** (23 மார்ச் 2026)

  உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மூன்றாம் நிலைப் பராமரிப்பு ஏற்பாடுகளை இயலச் செய்வதற்காக, மகியங்கனை ஆதார வைத்தியசாலையை (வகை A, பதுளை மாவட்டத்தின் மூன்றாவது பெரிய வைத்தியசாலை) ஊவா மாகாண சபையிலிருந்து மத்திய அமைச்சிற்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கியது.

- **விபத்து மற்றும் அவசரநிலை சுகாதாரப் பராமரிப்பு முறைமையின் மேம்பாடு** (3 மார்ச் 2026)

  அவசரநிலை சேவைகளை ஓர் ஒற்றை நிர்வாக மற்றும் ஒழுங்குறுத்தற் சட்டகத்தின் கீழ் ஒன்றிணைப்பதற்காக, விபத்து மற்றும் அவசரநிலைப் பராமரிப்புப் பணியகம் ஒன்றைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது

- **இலங்கைத் தாதியர் சபைக்கான புதிய கட்டடத்திற்காக காணி கையளித்தல்** (3 மார்ச் 2026)

  தாதி உத்தியோகத்தர்களின் பதிவு, பயிற்சி, மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்தி என்பவற்றிற்காகு அர்ப்பணிக்கப்பட்ட தாதியர் சபை ஒன்றினை நிர்மாணிப்பதற்காக, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 35 அடி x 35 அடி கொண்ட காணியை நீண்டகாலக் குத்தகை அடிப்படையொன்றில் கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. பட்டப்பின் படிப்பு ஆரம்பத் தாதிக் கல்லூரியில் உள்ள தற்காலிக அமைவிடத்திற்கு மாற்றீடாகும்.

- **சுகாதார அமைச்சின் கீழ் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் இடமாற்றம்** (3 மார்ச் 2026)

  மூன்றாம் நிலை 'A' வகை ஆதார வைத்தியசாலை ஒன்றாக இவ்வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக வடமேல் மாகாண சபையிடமிருந்து சுகாதார அமைச்சிற்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 9 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த ஏறத்தாழ 4 மில்லியன் மக்களுக்கு சேவை வழங்குகின்றது.

- **தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினை டிஜிட்டல்மயப்படுத்தல்** (9 மார்ச் 2026)

  உலக வங்கியின் விதப்புரைகளின் ஊடாக Open Society Foundation இடமிருந்தான USD 200,000 மானியம் ஒன்றுடன் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தொழிற்பாட்டு இயக்கங்களை டிஜிட்டல்மயமாக்குவதற்கான கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. மென்பொருள் அபிவிருத்தி, உபகரணங்கள், மற்றும் HR கொள்திறன் கட்டியெழுப்புதலுக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## போக்குவரத்து, பெருந்தெருக்கள், மற்றும் நகர அபிவிருத்தி

- **பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் கைமாற்றல் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்** (16 மார்ச் 2026)

  2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் கைமாற்றல் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்றத்தின் இணக்கத்திற்காக சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2026 ஜனவரி 7 ஆம் திகதிய 2471/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்டது; பேருந்து அனுமதிப்பத்திரங்களின் கைமாற்றல் தொடர்பான சட்டப் பிரச்சினைகளைத் தீர்க்கின்றது; பயணிகள் போக்குவரத்து முறைமையின் தடையற்ற தொழிற்பாட்டை உறுதிப்படுத்துகின்றது.

- **மோட்டார் போக்குவரத்துச் சட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்தல் (பிரிவு 203 அதிகாரசபை)** (16 மார்ச் 2026)

  50,000 இற்கு அப்பாற்பட்ட விசேட வாகன இலக்கங்களை ஒதுக்கிக் கொள்வதற்கும் இலக்கம் ஒன்றிற்கு ரூ. 1,000,000 அறவிடுவதற்குமான ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்தது. 2026 ஜனவரி 5 ஆம் திகதிய 2470/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்டது; மோட்டார் வாகனங்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள், மற்றும் முச்சக்கர வான்கள் தவிர்ந்த அனைத்து வாகனங்களுக்கும் ஏற்புடையதாகும்; ஒழுங்குறுத்தற் சட்டகம் மற்றும் வருமான உருவாக்கம் என்பவற்றை வலுப்படுத்துகின்றது.

- **பேருந்துக் கட்டணங்களின் திருத்தம்** (23 மார்ச் 2026)

  2026 மார்ச் 22 ஆம் திகதி ஏற்பட்ட டீசல் விலை உயர்வைத் தொடர்ந்து அனைத்து சேவைப் பிரிவுகளுக்கும் பேருந்துக் கட்டணங்களில் 12.19% அதிகரிப்பு ஒன்றிற்கு அங்கீகாரம் வழங்கியது. தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது; பொது, அரைச் சொகுசு, சொகுசு, மற்றும் விசேட சொகுசுப் பேருந்துகளுக்கு ஏற்புடையதாகும்; 2026 மார்ச் 23 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

- **ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து பயன்படுத்தப்பட்ட தாழ்தளப் பேருந்துகளைப் பெற்றுக்கொள்ளல்** (3 மார்ச் 2026)

  பொதுப் பேருந்துப் போக்குவரத்து உட்கட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 8 தாழ்தளப் பேருந்துகளை மானியம் ஒன்றாகப் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. ஜப்பானுடனான இருதரப்புக் கலந்துரையாடல்களின் விளைவாக ஏற்பட்டது.

- **மத்திய அதிவேகப்பாதையின் குருநாகல் - தம்புள்ளை பகுதியின் கட்டம் IV இன் நிர்மாணம்** (3 மார்ச் 2026)

  மத்திய அதிவேகப்பாதையைப் பூர்த்தி செய்வதற்கான நிதி ஒதுக்கீடு, பூகோள தொழில்நுட்ப அளவைகள், மற்றும் வெள்ளப்பெருக்கு/மழைநீர் முகாமைத்துவத் திட்டங்கள் உள்ளடங்கலாக 58.6 கி.மீற்றர் கொண்ட கட்டம் IV இன் துரித நடைமுறைப்படுத்தலுக்கு அங்கீகாரம் வழங்கியது. 73.3% காணி சுவீகரிப்பு பூர்த்தியடைந்துள்ளதுடன் இழப்பீடுகள் நிலுவையில் உள்ளன; சரிவு உறுதித்தன்மை மற்றும் நிலச்சரிவு அபாயங்கள் என்பவற்றைத் தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மதிப்பீடு செய்யவுள்ளது; இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் நீரியல் மற்றும் வெள்ளப்பெருக்கு அபாய முகாமைத்துவத்தைத் தயார் செய்யவுள்ளது.

- **ரஷ்யக் கூட்டமைப்பின் போக்குவரத்து அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடல்** (30 மார்ச் 2026)

  போக்குவரத்துத் துறையில் பயிற்சி, அரச தனியார் பங்குடமை மாதிரிகள், மற்றும் பல்வழிப் போக்குவரத்து அபிவிருத்தி என்பவற்றில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காக இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது.

## பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள்

- **'திவியட சவியக்' வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்** (30 மார்ச் 2026)

  முன்னர் நிறுவனமயப்படுத்தப்பட்டிருந்த இளைஞர்கள் மற்றும் ஆபத்துக்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள குடும்பங்கள் உள்ளடங்கலான பாதிப்புறு நிலையிலுள்ள குழுக்களுக்கு, காணிக் கொள்வனவு, நிர்மாணம், மற்றும் புனரமைப்பு என்பவற்றை உள்ளடக்கி, பயனாளர் ஒருவருக்கு 2 மில்லியன் ரூபா வரையான வீடமைப்பு நிதி உதவிக்கான ஏற்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்கியது. 2026 இன் வரவுசெலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 2,000 மில்லியன் ஒதுக்கீடு ஒன்றின் ஊடாக நிதியளிக்கப்படுகின்றது; பயனாளர்களுள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறிய 45 வயதிற்குட்பட்ட தனியாட்கள், ஆபத்துக்குள்ளாகக்கூடிய சிறுவர்கள், மற்றும் பாதுகாப்பான புகலிடமின்றி வாழும் பாதிப்புறு நிலையிலுள்ள குடும்பங்கள் என்பவை உள்ளடங்கும்; தகுதி பெறுவதற்கான அளவுகோல்கள், மதிப்பீட்டு நடைமுறைகள், மற்றும் விநியோகப் பொறிமுறைகள் என்பவற்றைத் தாபிக்கின்றது.

- **'அர்த்த' நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவாக்கம்** (30 மார்ச் 2026)

  சிறுவர் பாதுகாப்புக் குறிக்கோள்களுக்கு அமைவாக மேலும் பாதிப்புறு நிலையிலுள்ள சிறுவர்களை – அநாதைகள், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், மற்றும் சமூகரீதியாக ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய நிலையிலுள்ளோர் என இனங்காணப்பட்டோர் - உள்ளடக்குவதற்காக மாதாந்தம் ரூ. 5,000 நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. டித்வா சூறாவளி மற்றும் தொடர்புடைய வெள்ளப்பெருக்கு அல்லது நிலச்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை சேர்த்துக் கொண்டுள்ளது; நிறுவனப் பராமரிப்பிற்கு வெளியே வாழ்கின்ற, ஆனால் சமூகரீதியாக அல்லது பொருளாதாரரீதியாக பாதிப்புறு நிலைமைகளில் வாழும் சிறுவர்களையும் உள்ளடக்குகின்றது.

## பொதுமக்கள் பாதுகாப்பு, குடிவரவு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள்

- **39 நாடுகளின் கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ளோருக்கு இலவச சுற்றுலா வீசாக்களை வழங்குதல்** (30 மார்ச் 2026)

  39 நாடுகளின் கடவுச்சீட்டுக்களைக் கொண்டுள்ளோருக்கு ஆறு மாதங்களுக்கு இலவச சுற்றுலா வீசாக்களை வழங்குவதற்கான வரைவு ஒழுங்குவிதிகளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

- **விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டமையால் பாதிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வீசா செல்லுபடியாகும் காலத்தை நீட்டிப்புச் செய்தல்** (9 மார்ச் 2026)

  2026 பெப்ரவரி 28 அம் திகதியிலிருந்து விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்ட காரணத்தினால் மத்திய கிழக்கிற்கு செல்ல முடியாத நிலையிலுள்ள சுற்றுலாப்பயணிகளின் வீசாக்களின் செல்லுபடியாகும் காலத்தை,

ஆரம்பத்தில் 14 நாட்களினாலும், பின்னர் மேலும் சாத்தியமான 14 நாள் காலப்பகுதி ஒன்றிற்கும் செலவின்றி நீட்டிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது.

- **இராஜதந்திர, உத்தியோகபூர்வ, மற்றும் சேவைக் கடவுச்சீட்டுகளை வைத்திருப்போருக்கு வீசா பெற்றுக்கொள்வதிலிருந்து விலக்களிப்பதற்காக நேபாளத்துடனான உடன்படிக்கை** (9 மார்ச் 2026)

  இராஜதந்திர, உத்தியோகபூர்வ, மற்றும் சேவைக் கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ள இலங்கை மற்றும் நேபாளத்தைச் சேர்ந்தோர் மற்றைய நாட்டில் 30 நாட்கள் வரை வீசா இன்றி நுழைவதற்கும், ஊடாகப் பயணிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் அனுமதிக்கும் இருதரப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. உத்தியோகபூர்வ பயணத்திற்கு வசதிசெய்வதுடன் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துகின்றது; அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான அதிகாரத் தடைகளைக் குறைக்கின்றது.

- **இராஜதந்திர, உத்தியோகபூர்வ, மற்றும் சேவைக் கடவுச்சீட்டுகளை வைத்திருப்போருக்கு வீசா பெற்றுக்கொள்வதிலிருந்து விலக்களிப்பதற்காக மொரோக்கோவுடனான உடன்படிக்கை** (3 மார்ச் 2026)

  இராஜதந்திர, உத்தியோகபூர்வ, மற்றும் சேவைக் கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ளோர் 30 நாட்கள் வரை வீசா இன்றி நுழைவதற்கும், ஊடாகப் பயணிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் அனுமதிக்கும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது; 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கையை இற்றைப்படுத்துகின்றது; இராஜதந்திர பயணங்கள் மற்றும் உத்தியோகபூர்வ தூதுப்பயணங்களுக்கு வசதி செய்கின்றது; இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினை வலுப்படுத்துகின்றது.

## நீதி, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு

- **ஊடகத் தொழில் வல்லுநர்களுக்கான பட்டய நிறுவனத்திற்கான வரைவுச் சட்டமூலம்** (30 மார்ச் 2026)

  ஊடகப் பயிற்சியை தொழில்வாண்மை மிக்கதாக ஆக்குவதையும் தராதரங்களை மேம்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு ஊடகத் தொழில் வல்லுநர்களுக்கான பட்டய நிறுவனம் ஒன்றினைத் தாபிப்பதற்கான வரைவுச் சட்டமூலம் ஒன்றினை வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது.

- **ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல் மீதான வரைவுச் சட்டமூலம்** (30 மார்ச் 2026)

  நிபுணர் குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான புதிய சட்டவாக்கத்தின் வரைவைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் தற்போதுள்ள குற்றவியல் சட்டத்திலுள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்கின்றது; குற்றவியல் குழுக்களிலிருந்து பிரசைகள் மற்றும் வியாபாரங்களைப் பாதுகாக்கின்றது; சட்ட அமுலாக்கம், வழக்குத் தொடர்தல், மற்றும் முகவராண்மைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு என்பவற்றிற்கான சட்டகம் ஒன்றினை ஏற்பாடு செய்கின்றது.

- **2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழலுக்கெதிரான சட்டத்தின் 156 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்** (30 மார்ச் 2026)

  ஊழலுக்கெதிரான சட்டத்தின் கீழான இணக்கத்தை மேம்படுத்துவதற்காக, ஒருமுகப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றின் ஊடாக சொத்து மற்றும் பொறுப்புகளின் இலத்திரனியல் சமர்ப்பித்தலை இயலச்செய்யும் ஒழுங்குவிதிகளின் வெளியீட்டிற்கு அங்கீகாரம் வழங்கியது. சொத்துப் பிரகடனப் படிவங்கள் மற்றும் நடைமுறைகளைத் தரப்படுத்துகின்றது.

- **நஞ்சு வகைகள், அபின், மற்றும் அபாயகர அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் திருத்தம்** (16 மார்ச் 2026)

  சட்ட இணக்கம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில், சான்றிற்காக மாதிரி ஒன்றைத் தக்கவைத்ததன் பின்னர், கைப்பற்றப்பட்ட அவுடதங்களை அகற்றுவதற்கு அனுமதிக்கும் வரைவுச் சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. குழுவிற்கு நீதி அமைச்சின் செயலாளர் தலைமை தாங்குவார்.

- **போதைப்பொருட்கள் கடத்தலில் eZCash மற்றும் mCash இன் சட்டவிரோத பயன்பாட்டிற்கு எதிரான சட்ட நடவடிக்கை** (16 மார்ச் 2026)

  போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் eZCash மற்றும் mCash இனைப் பயன்படுத்தும் தனியாட்களை ஓர் ஒன்றிணைக்கப்பட்ட தரவுத்தளம் மற்றும் சட்ட அமுலாக்கச் சட்டகத்தின் ஊடாக அடையாளம் காண்பதற்கும், கண்டறிவதற்கும், அத்துடன் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்குமான நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. மத்திய வங்கி, இலங்கைப் பொலிஸ், மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் என்பவற்றைத் தொடர்புபடுத்தும் ஒருங்கிணைந்த தரவுத்தளம்; பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையிலான குழுவினால் நடைமுறைப்படுத்தல் வழிநடத்தப்படும்.

## பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்

- **பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான மேற்பார்வைக் குழுக்களைத் தாபித்தல்** (16 மார்ச் 2026)

  உலகளாவிய பூகோள அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையின் மத்தியில் உள்நாட்டுப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டு நான்கு குழுக்களை அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது: வலுசக்திக் குழு (வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் - எரிபொருள், எரிவாயு, மற்றும் நிலக்கரிக் கொள்வனவு);

பொதுச் சேவைக் குழு (பிரதம அமைச்சர் - அரசாங்க சேவைகளை வினைத்திறனுடன் பேணுதல்); அத்தியாவசியப் பொருட்கள் குழு (போக்குவரத்து அமைச்சர் (வழங்கற் சங்கிலித்தொடர்கள், நியாயமான விலையிடல்); மற்றும் நலன்புரிக் குழு (கிராமிய அபிவிருத்தி அமைச்சர் - சமூகத் தாக்கங்களைக் கண்காணித்தல் மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு).

- **புதன்கிழமையை அரசாங்க விடுமுறை தினம் ஒன்றாகப் பிரகடனம் செய்தல்** (16 மார்ச் 2026)

  எரிபொருளை சேமித்தல் மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் பூகோள அரசியல் குழப்பங்களினால் ஏற்பட்டுள்ள விநியோக மட்டுப்பாடுகளை முகாமை செய்தல் என்பவற்றிற்காக புதன்கிழமையை அரசாங்க விடுமுறை தினம் ஒன்றாகப் பிரகடனம் செய்தது.

- **எலபாத பிரதேச செயலகத்தின் நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி** (9 மார்ச் 2026)

  பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க பகிரங்க சேவை விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில், தற்போதுள்ள பாதுகாப்பற்ற வசதிகளை மாற்றியமைப்பதற்காக ஒரு புதிய 25,000 சதுர அடி அலுவலகக் கட்டடத்தொகுதி மற்றும் பிரதேச செயலருக்கான 1,600 சதுர அடியிலான விடுதி என்பவற்றின் நிர்மாணத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. சேவையைப் பெறும் சனத்தொகை: 20 கிராம அலுவலர் பிரிவுகளில் அண்ணளவாக 39,700; தடுப்புச் சுவருடனான நிலச்சரிவு அபாயத் தணிப்பு; கருத்திட்டக் காலப்பகுதி 2026 – 2028.

- **பகிரங்க சேவைக்கான ஆட்சேர்ப்பின் மீளாய்வு மற்றும் குழு விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தல்** (3 மார்ச் 2026)

  குழுவின் மீளாய்வு, முன்னுரிமை, மற்றும் திணைக்களக் கோரிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு அமைச்சுகள் மற்றும் மாகாண சபைகளுக்கிடையே நிலவும் 15,839 வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பிற்கு அங்கீகாரம் வழங்கியது. பிரதான ஆட்சேர்ப்புகள்: பாதுகாப்பு (9,794), பொதுமக்கள் பாதுகாப்பு (1,915), மற்றும் வட மாகாணம் (411).

## புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள்

- **அரச வெசக் உற்சவம் 2026** (30 மார்ச் 2026)

  வெசக் வாரத்தின் பிரகடனத்துடன் (27 மே – 2 ஜுன்) மாத்தறையிலுள்ள மிதெல்லவல புராண விகாரையில் 2026 இற்கான அரச வெசக் உற்சவத்தை ஒழுங்கு செய்வதற்கும் ‘அபித்தரேத்த கல்யாணே’ என்னும் கருப்பொருளின் கீழ் சமய வேலைத்திட்டங்களை நாடளாவியரீதியில் நடத்துவதற்கும் அங்கீகாரம் வழங்கியது. பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் பௌத்த அமைப்புகளை ஒருங்கிணைக்கின்றது; சமய அனுஷ்டானங்களில் நாடளாவிய கலாசாரப் பங்குபற்றலை உறுதிப்படுத்துகின்றது; வழங்கல்கள், மற்றும் சமுதாய ஈடுபாட்டுத் திட்டங்களைக் கூட்டிணைக்கின்றது.

- **தொல்பொருளியல் பரிசில் நிதிய ஒழுங்குவிதிகள்** (16 மார்ச் 2026)

  தொல்பொருளியல் பொருட்களை மீளப்பெறுகின்ற அல்லது தொல்பொருட்களைப் பாதுகாக்கின்ற தகவல் வழங்குநர்கள் அல்லது உத்தியோகத்தர்களுக்குப் பரிசில் வழங்குவதற்கான வரைவு ஒழுங்குவிதிகளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

- **1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்திற்கான திருத்தம்** (16 மார்ச் 2026)

  மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாகத்தை நவீனமயப்படுத்துதல் அத்துடன் கலாசார மற்றும் சமய முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்குவதை உறுதிப்படுத்துதல் என்பவற்றிற்கான கொள்கைத் திருத்தங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது. மரபுரிமை அபிவிருத்தி, கலைஞர்களுக்கு ஆதரவு, மற்றும் கலாசார விருதுகள் என்பவற்றிற்கான நிதி ஏற்பாடுகளை இற்றைப்படுத்துகின்றது.

- **தேசிய நாமல் உயனவைத் தேசிய மரபுரிமையாகப் பிரகடனம் செய்தல்** (16 மார்ச் 2026)

  தேசிய நாமல் உயனவின் (602 ஹெக்டேயர்கள், மிகப்பெரிய நாகமரக் காடு) புவியியல், சூழலியல், மற்றும் தொரல்பொருளியல் முக்கியத்துவத்தின் காரணமாக அதனைத் தேசிய மரபுரிமை இடம் ஒன்றாகப் பிரகடனம் செய்தது. சிறப்பம்சங்கள்: இளஞ்சிவப்புப் படிகக்கல் மலைத்தொடர், உலர் வலய வன சூழற்றொகுதி, மற்றும் புராதன பௌத்த ஆசிரமங்கள்.

## சுற்றாடல்

- **நீரியல் சுற்றாடல் கண்காணிப்பிற்காக பாரியளவிலான தரவு முறைமையைத் தாபித்தல்** (16 மார்ச் 2026)

  தரவுகளினால் ஊக்குவிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களை இயலச் செய்யும் வகையில், நீரின் தரம், கைத்தொழில் கழிவுநீர், மற்றும் நீரியல் சுற்றாடல் என்பவற்றைக் கண்காணிப்பதற்காக பாரியளவிலான தரவு முறைமை ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையிடமிருந்தான மானியம்: ரூ. 646 மில்லியன்; மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மொரட்டுவைப் பல்கலைக்கழகம், மற்றும் Tohoku பல்கலைக்கழகம் ஆகியவற்றுடனான பங்காண்மை.

- **அறிவியல் ரீதியாக அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்** (9 மார்ச் 2026)

டித்வா சூறாவளி தாக்க மதிப்பீட்டிலிருந்தான விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, உட்கட்டமைப்பு, விவசாயம், சுற்றாடல், மற்றும் சூழற்தொகுதி முறைமைகள் என்பவற்றில் அனர்த்தத்திற்குப் பின்னரான பதிற்செயற்பாட்டிலிருந்து அறிவியல் ரீதியிலாக முகங்கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு மாறுவதற்கான இருவழி மூலோபாயம் ஒன்றிற்கு அங்கீகாரம் வழங்கியது. நிறுவனம்சார் ஆராய்ச்சித் தேவைப்பாட்டு மதிப்பாய்விற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டமானது 2026 ஜனவரி 14 இல் நடத்தப்பட்டது; ஏழு மூலோபாய ஆராய்ச்சி மற்றும் முறைமைசார் அபிவிருத்தி விதப்புரைகள் அத்துடன் ஏழு நடைமுறைப்படுத்தல் விதப்புரைகள்.

## மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள்

- **இந்திய அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் மீன்பிடித் துறையிலுள்ள கள உத்தியோகத்தர்களுக்கு மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்குதல்** (16 மார்ச் 2026)

  மீன்பிடித் திணைக்களம் மற்றும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்த கள உத்தியோகத்தர்கள், மற்றும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையைச் சேர்ந்த ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆகியோருக்கு 430 மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. மொத்த செலவான ரூ. 264.59 மில்லியன் நிதி இந்திய அரசாங்கத்தின் மானியத்தால் வழங்கப்பட்டது; இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரமளிக்கின்றது.

## வீடமைப்பு, நிர்மாணம், மற்றும் நீர் வழங்கல்

- **மேல் மாகாணத்திற்கான பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நீர் வழங்கல் கருத்திட்டம்** (3 மார்ச் 2026)

  24 மாத காலப்பகுதியில் CDRI இடமிருந்தான USD 469,232 மானியம் மற்றும் USD 10,000 உள்ளூர் இணை நிதியளிப்பு என்பவற்றுடன் அம்பத்தலை நீர் வழங்கல் திட்டத்தினுள் காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுக்கும் நிலையை ஒருங்கிணைக்கும் கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி நிலைகளின்போது குடிநீர் பாதுகாப்பினை நிவர்த்தி செய்கின்றது.

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து

- **இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து சேவைகளுக்கான பெருந்திட்டம்** (23 மார்ச் 2026)

  பாதுகாப்பு, வினைத்திறன், கொள்திறன், மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றிற்கான ICAO தராதரங்களுடன் ஒத்ததாக அமைந்த, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் உருவாக்கப்பட்ட தேசிய சிவில் விமானப் போக்குவரத்துப் பெருந்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

## சுற்றுலாத்துறை

- **சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2026–2028** (9 மார்ச் 2026)

  யாழ்ப்பாண மாவட்டத்தின் உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளடங்கலாக 9 மாகாணங்களிலும் ரூ. 2,667.03 என்னும் மொத்த செலவினத்துடன் நாடளாவிய சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை 2026 – 2028 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. யாழ்ப்பாண மாவட்டக் கருத்திட்டங்கள்: ரூ. 131.02 மில்லியன்; நிலைபெறுதகு சுற்றுலாத்துறை மற்றும் பிராந்திய அபிவிருத்தி என்பவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

## பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு

- **கைவிடப்பட்டுள்ள முதிர்ந்த இறப்பர் பெருந்தோட்டங்களின் உற்பத்தித்திறனை தரமுயர்த்தல்** (3 மார்ச் 2026)

  மரப்பால் (latex) உற்பத்தி, ஏற்றுமதிப் பெறுமதி, மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பங்களிப்பு ஆகியவற்றை அதிகரிப்பதற்காக ரூ. 1,212.38 மில்லியன் ஒதுக்கீட்டுடன் 2026 – 2028 காலப்பகுதியில் 3,300 ஹெக்டேயர் இறப்பர் காணிகளின் மீட்டெடுப்பிற்கு அங்கீகாரம் வழங்கியது. திறன் மிக்க தொழிலாளர்கள் மற்றும் பால் வெட்டும் நுட்பங்கள் பற்றிய அறிவு ஆகியவற்றின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்றது; பராமரிப்புச் செலவு மற்றும் பயன்படுத்தப்படாத காணிகள் ஆகியவற்றைக் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

## விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

- **சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2026–2028** (9 மார்ச் 2026)

  டித்வா சூறாவளி தாக்க மதிப்பீட்டிலிருந்தான விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, உட்கட்டமைப்பு, விவசாயம், சுற்றாடல், மற்றும் சூழற்தொகுதி முறைமைகள் என்பவற்றில் அனர்த்தத்திற்குப் பின்னரான பதிற்செயற்பாட்டிலிருந்து அறிவியல் ரீதியிலாக முகங்கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு மாறுவதற்கான இருவழி மூலோபாயம் ஒன்றிற்கு அங்கீகாரம் வழங்கியது.

## பாதுகாப்பு

- **குடும்ப மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் வீட்டு நிர்மாணத்திற்கான தொகையில் திருத்தம்** (9 மார்ச் 2026)

  நிலச்சரிவு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீட்டு நிர்மாணத்திற்கான அதியுச்ச மானியத்தை பயனாளர் குடும்பம் ஒன்றிற்கு ரூ. 1.6 மில்லியனிலிருந்து ரூ. 2.5 மில்லியன் வரை அதிகரிக்கின்றது. நிலச்சரிவு ஏற்படுவதற்கான அதிக ஆபத்துள்ள பிரதேசங்களை உள்ளடக்குகின்றது; பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பாதுகாப்பான மீள் குடியமர்வு மற்றும் வீடமைப்பிற்கு ஆதரவு வழங்குகின்றது.

- **2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பாதுகாப்புப் பணியாட்டொகுதிப் பிரதானி சட்டத்தை நீக்குதல்** (3 மார்ச் 2026)

  CDS சட்டத்தை நீக்குவதற்கான வரைவுச் சட்டமூலத்தை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது.

- **பரவலான அனர்த்த நிலைமைகளின்போது அரசாங்க அலுவலர்களுக்கான படிகளின் கொடுப்பனவு** (3 மார்ச் 2026)

  2025 நவம்பர் 21 தொடக்கம் 2025 டிசம்பர் 15 வரை சேவையாற்றிய அலுவலர்களுக்கும் எதிர்காலத்தில் அனர்த்தநிலையின்போது சேவையாற்றுவோருக்கும் அனர்த்தம் தொடர்பான படிகளில் 100% அதிகரிப்பு ஒன்றிற்கு அங்கீகாரம் வழங்குகின்றது.

## கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சியாண்மை

- **உள்நாட்டு கைத்தொழில்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கழிவு உலோக ஏற்றுமதிகளைத் தடுத்தல்** (30 மார்ச் 2026)

  புதிய மூலப் பொருட்களுக்கான பற்றாக்குறைகளை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டு உற்பத்திக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் சட்டவிரோத கழிவு உலோக எற்றுமதிகளைத் தடுப்பதற்காக சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

## விளையாட்டு

- **2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து (தடை செய்யப்பட்ட பட்டியல்) ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்தல்** (3 மார்ச் 2026)

  WADA உடன் நேரொத்ததாக அமைந்துள்ள தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகளின் 2026 ஆம் ஆண்டிற்கான தடை செய்யப்பட்ட பட்டியலை பாராளுமன்றத்தின் இணக்கத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. சர்வதேச தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகள் தராதரத்துடன் தேசிய ஒத்திசைவை உறுதிப்படுத்துகின்றது; விளையாட்டு வீரர்களின் நேர்மை மற்றும் நியாயமான போட்டிகளுக்கு ஆதரவு வழங்குகின்றது; உலகளாவிய சமவாயங்களுடனான ஒழுங்குறுத்தல் ஒருங்கிசைவு.

---

*பொறுப்புத்துறப்பு - இலங்கையின் அண்மைய சட்டவாக்க மற்றும் நிறைவேற்றுத்துறை முன்னேற்றங்கள் குறித்து அறிந்து கொள்ள நாடுவோருக்கு உதவுவதற்காக சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் வேண்டப்பட்டவாறான சுருக்கமான அறிக்கையொன்றாக இது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் எவ்விதமான பகுப்பாய்வும் காணப்படவில்லை என்பதுடன் வழங்கப்பட்ட ஏதேனும் விளக்கம் ஆவணத்தின் அல்லது தீர்மானத்தின் சுருக்க விளக்கமேயாகும். இது முழுமையானதல்ல என்பதுடன் சட்ட ஆலோசனையாக இதன் மீது தங்கியிருத்தலுமாகாது. குறிப்பிட்ட சட்டரீதியான அக்கறைகளுக்காகத் தயவுசெய்து தகுந்த சட்ட ஆலோசனையை நாடவும். கேள்விகளுக்கு, தெளிவுபடுத்தல்களுக்கு, அல்லது பின்னூட்டங்களை வழங்குவதற்குத் தயவுசெய்து tegal.lawchambers@gmail.com இனைத் தொடர்பு கொள்ளவும்*